செய்தி வெளியீடு எண் 278 நாள்–27.3.2010

# நாளை காலை சென்னையில் “பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை கருத்தரங்கம்!”

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைக்கிறார்!

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில், நாளை (28.3.2010 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ்கொரமண்டலில், “பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை” எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தக் கருத்தரங்கினைத் தொடங்கிவைத்துச் சிறப்புரையாற்றுகிறார்கள். இந்நிறுவனத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் தமிழக அரசு நீர்வளத் துறையின் பன்மாநில நதிநீர்ப் பிரிவு – காவிரி தொழில்நுட்பக் குழுமத் தலைவரும், நீர்வளத் துறையின் ஆலோசகருமாகிய பேராசிரியர் ஆ. மோகன கிருஷ்ணன், தமிழக அரசு தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் திரு. நடன காசிநாதன், பனைத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் இலக்கியச் செல்வர், முனைவர் குமரி அனந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

இக்கருத்தரங்கில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கேற்ப, “குடியரசுத் தலைவரின் தொல்காப்பியர் விருது” பெறவுள்ள பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் பொற்கிழியையும்;

2005–2006ஆம் ஆண்டிற்கான “இளம் அறிஞர் விருது” பெறவுள்ள முனைவர் இரா. அறவேந்தன் (தாமோதரன்), முனைவர் ய. மணிகண்டன், முனைவர் சி. கலைமகள், முனைவர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர், முனைவர் கே. பழனிவேலு;

2006–2007ஆம் ஆண்டிற்கான “இளம் அறிஞர் விருது” பெறவுள்ள முனைவர் க. சந்திரா, முனைவர் அரங்க. பாரி, முனைவர் மு. இளங்கோவன், முனைவர் மா. பவானி, முனைவர் இரா. கலைவாணி;

2007–2008ஆம் ஆண்டிற்கான “இளம் அறிஞர் விருது” பெறவுள்ள முனைவர் அ. செல்வராசு, முனைவர் ப. வேல்முருகன், முனைவர் ஆ. மணவழகன், திரு. ச. சந்திரசேகரன், முனைவர் சா. சைமன் ஜான்

ஆகிய 15 அறிஞர்களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொற்கிழிகளையும் என மொத்தம் 20 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொற்கிழிகளை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்குவார்கள்.

செய்தி வெளியீடு

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,

சென்னை 9.

********